2020 ஜனவரி 7]

மாத காலத்திற்குள் முடிந்துவிடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***18997—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், மணக்கொல்லை கீழ்க்காலனி பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் சிறந்த நிருவாகத்திற்கான ஆளுமை விருதைப் பெற்றுத் தந்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசை சிறப்பாக வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், மணக்கொல்லை ஊராட்சி கீழ்க்காலனியில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயன்பாட்டில் உள்ள நிலையில், கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். இந்தியாவில் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலம் என்ற இலக்கோடு நல்லாட்சி நடத்திவரும் குடிமராமத்து நாயகர், எடப்பாடி தந்த சிங்கம், எங்கள் தங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகி வருகின்ற மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, எதிர்கால குடிநீர்த் தேவையின் அவசியம் கருதி, தொலைநோக்குப் பார்வையோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தர முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், மணக்கொல்லை ஊராட்சியிலுள்ள கீழ்க்காலனியில் புதிய குடியிருப்பு, பழைய குடியிருப்பு என இரு பகுதிகள் உள்ளன. இப்பகுதிகளில் தலா 110 வீடுகள் உள்ளன. அவற்றில் மொத்தம் 720 நபர்கள் வசித்து வருகின்றனர். புதிய குடியிருப்புப் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 3 சிறு மின்விசைப் பம்புகளும் உள்ளன. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 12.5 H.P. திறன் கொண்ட மின் மோட்டார்மூலம் நீர் ஏற்றப்பட்டு, இப்பகுதியிலுள்ள 20 பொதுக் குழாய்கள் மற்றும் 25 தனி நபர் வீட்டுக் குடிநீர் இணைப்புகள்மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 50 மீட்டர் தொலைவிலுள்ள

2020 ஜனவரி 7]

பழைய குடியிருப்புப் பகுதியில் குடிநீர் வழங்குவதற்கு சிரமம் ஏற்பட்டது. அந்தச் சிரமத்தைச் சரி செய்வதற்காக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, 8.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆழ்துளைக்கிணறு ஒன்றை அமைக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன. இப்பணிகள் நிறைவு பெற்றவுடன், இப்பகுதியில் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகர், கடலூர் சாலையில் அரசுக்குச் சொந்தமான 9.23 ஏக்கர் நிலம் உள்ளது. நெடுஞ்சாலைத் துறையின்மூலம் சென்னை புறவழிச் சாலையில் சுற்றுவட்டாரப் பாதையும் அமைக்கப்படவுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவ்விடத்தில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனது தொகுதி மக்களின் தேவைக்காக இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். அங்கு புறநகர் பேருந்து நிலையம் அமைக்கத் தேவையான இடம் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார். அங்கிருக்கக்கூடிய பேருந்துகளில், எத்தனை பேருந்துகள் அந்தப் பேருந்து நிலையத்திற்கு வருகின்றன, அங்குள்ள சூழ்நிலை ஆகியவற்றை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2020 ஜனவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளிலே அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்காக, எங்களுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள், 1972 ஆம் ஆண்டு TWAD Board–ஐக் கொண்டு வந்தார்கள். அந்தக் காலக்கட்டத்தில், ஒரு பகுதியில் 5,000 பேர் இருந்திருப்பார்கள். தற்போது, ஒரு பகுதியில் ஏறத்தாழ 30,000 பேர், 40,000 பேர் இருக்கிறார்கள். அப்போதைய மக்கள்தொகைக்கேற்ப கட்டப்பட்ட 20,000 லிட்டர், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்தான் தற்போதும் உள்ளன. கடந்த 8 ஆண்டுகளாக எந்தக் கிராமத்திலும், மக்கள் தொகைக்கேற்றவாறு புதியதாக குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்படவில்லை. Bore போட்டு, நேரடியாக தண்ணீர் விநியோகம் செய்கிறார்கள். அது தரமான தண்ணீரா, மக்களுக்குக் குடிப்பதற்கு உகந்த தண்ணீரா என்பதைக்கூட பார்ப்பது கிடையாது. மேலும், சில இடங்களில் பைப் உடைந்துபோய் விடுவதால், 10 நாட்கள், 15 நாட்கள் தண்ணீர் வராமல் மக்கள் சிரமப்படுகின்ற ஒரு நிலைமையும் இருக்கின்றது. எனவே, மக்கள் தொகைக்கேற்றவாறு எல்லாப் பகுதிகளிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இந்த அரசு அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட கடந்த 8 ஆண்டுகளாக குடிநீர்த் தொட்டிகள் கட்டப்படவில்லை என்று சொல்வது தவறான கருத்து. பல்வேறு இடங்களில் சூழ்நிலைக்கேற்ப, துறையால் அனுமதி வழங்கப்பட்டு, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதிகள் தரப்பட்டு, குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கீழுள்ள சென்னை குடிநீர் வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் மூலமாக நகராட்சி மற்றும் பேரூராட்சிப்

2020 ஜனவரி 7]

பகுதிகளில் கிட்டத்தட்ட 25,434 குடிநீர்த் தொட்டிகளை எங்கு அவசியம் இருக்கிறதோ அந்த இடங்களில் கட்டியிருக்கிறோம். சில இடங்களில் டேங்க் தேவையில்லை எனும்போது, bore *போட்டு, தண்ணீர் எடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது என்றால், அங்கு* bore *போட்டு, தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அதேபோன்று, தற்போது எல்லாப் பகுதிகளிலும்* R.O. water *கொடுக்கிறோம். முன்பு கிராமப்புறங்களில் இதுபோன்று கொடுத்தது கிடையாது, தற்போது கொடுக்கிறோம். அதேபோன்று, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கிராமங்களில் 99.11% குழாய்கள்மூலம் குடிநீர் கொடுக்கிறோம். ஆகவே, எந்தப் பகுதியில் குடிநீர் தேவை இருக்கிறேதோ, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமிருக்கிற கேள்விகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. தகவல் கோரல்

குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியுரிமை திருத்தச் சட்டத்தைப் பற்றி இந்த அவையிலே தீர்மானமாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று நான் ஏற்கெனவே தங்களுக்குக் கடிதம் மூலமாக எழுதியிருக்கிறேன். எனவே, அதுகுறித்து ஒரு சிறு விளக்கத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நீங்கள் இதுகுறித்த ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, என்னிடம் ஓர் அறிவிப்புக்*